**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி**
**முன்னிலை – திருமதி.P. கனிமொழி, L.L.M.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிபதி, தரங்கம்பாடி
2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15 ம் நாள் புதன் கிழமை
திருவள்ளுவராண்டு 2057, பராபவ வருடம் சித்திரை மாதம் 02 ம் நாள்

**TNMY09-000149-2025**

**OS.No.11/2025**

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா மற்றும் முன்சிபி, பொறையார் பெருமாள் தெற்குதெரு, கதவெண்.2/D என்ற முகவரியில் வசிக்கும் ஜாகிர்உசேன் அவர்களின் மனைவி 50 வயதுள்ள நிசார்பானு. .....வாதி

//எதிர்//

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா மற்றும் முன்சிபி, பொறையார் வாலியத்தெரு, கதவெண் 1/A என்ற முகவரியில் வசிக்கும் குலாம் மெய்தீன் அவர்களின் குமாரர் 72 வயதுள்ள முகம்மது கபீர். ..... பிரதிவாதி

இவ்வழக்கானது, வாதியின் கிரைய பத்திரமான 24.01.2012ஆம் தேதியில் ஏற்பட்ட பத்திரத்தில் கண்ட தரங்கம்பாடி தாலுக்கா, பொறையார் கிராமத்தின் புஞ்சை புல எண்கள் 78/1, 78/2 ஆகிய சர்வே எண்கள் தவறு என்றும், சரியான புல எண். 78/5A1A1 என்றும் வாதியால் விளம்புகை செய்யக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கு தாக்கலான நாள் – 03.02.2025
இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கபட்ட நாள் – 03.02.2025
இவ்வழக்கின் வழக்குமூலம் 30.11.2023 பொறையார் கிராமத்தில் உற்பத்தி.

இவ்வழக்கின் நீதிமன்ற கட்டணத்திற்கும், அதிகார வரம்பிற்குமாக ரூ.5,000/– என மதிப்பிட்டு அதற்கு நீதிமன்றக்கட்டணமாக ரூ.150/– நீ.ம.க.ச பிரிவுகள் 25(d) ன் படி செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்கானது 03.02.2025அன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனைக்கு வந்து, 09.04.2026–ம் தேதியன்று என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.S.S குணசேகரன் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும் இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் கடந்த 03.03.2025 அன்று தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும் வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இது நாள் வரை, இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>தீர்ப்பாணை</u>**

1. வாதியின் கிரைய பத்திரமான 24.01.2012ஆம் தேதியில் ஏற்பட்ட பத்திரத்தில் கண்ட தரங்கம்பாடி தாலுக்கா, பொறையார் கிராமத்தின் புஞ்சை புல எண்கள் 78/1, 78/2 ஆகிய சர்வே எண்கள் தவறு என்றும், சரியான புல எண். 78/5A1A1 என்றும் விளம்புகை செய்து வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு வழங்கி வாதிக்கு ஆதரவாக தீர்ப்பாணையிடப்படுகிறது.

2. செலவுத்தொகையில்லை என்று தீர்ப்பாணையிடப்படுகிறது.

**<u>சொத்து விபரம்:-</u>**

மயிலாடுதுறை மாவட்டம் & பதிவு மாவட்டம், தரங்கம்பாடி சார்பதிவகத்தை சேர்ந்த தரங்கம்பாடி தாலுக்கா, பொறையார் வட்டம், பொறையார் கிராமம், முஹையதீன் மரைக்காயர் தெருவில் கீழ் சரகில் உள்ளது.

1) புஞ்சை சர்வே எண்.78ல் எழுபெத்தெட்டில் திட்ட விஸ்தீரணம் 1.60.5 ஹெக்டேரில் ஒரு பகுதி கீழ்மேல் ஜாதியடி 80, தென்வடல் ஜாதியடி 52க்கு 4160 சதுரடிக்கு 386.50 சதுர மீட்டர் காலிமனை ( ஷை மனையின் புதிய சர்வே எண். யுடிஆர் படி 78-1)

**நான்கெல்லை விபரம்:-** முஹையதீன் மரைக்காயர் தெருவில் ரோட்டுக்கு தெற்கு, ராமநாதன் நஞ்சைக்கு வடக்கு, ஜெயராமன் மனைக்கு கிழக்கு, 2வது அயிட்ட மனைக்கு மேற்கு இதற்குள்பட்டது.

2) புஞ்சை சர்வே எண்.78ல் எழுபெத்தெட்டில் திட்ட விஸ்தீரணம்1.60.5 ஹெக்டேரில் ஒரு பகுதி கீழ்மேல் ஜாதியடி 16, தென்வடல் ஜாதியடி 40, ஆக 640 சதுரடிக்கு 59.50 சதுர மீட்டர் காலிமனை (ஷை மனையின் புதிய சர்வே எண்.யுடிஆர் படி 78-2)

**நான்கெல்லை விபரம்:-** முஹையதீன் மரைக்காயர் தெருவில் ரோட்டுக்கு தெற்கு, ராமநாதன் நஞ்சைக்கு வடக்கு, முகம்மது காசிம் இதர மனைக்கு மேற்கு, 1 வது அயிட்ட மனைக்கு கிழக்கு இதற்குள்பட்டது. ஆக கூடுதல் 4800 சதுரடிக்கு 446 சதுர மீட்டர் காலி மனை. இதில் கட்டிடம் மரந்தழை வகையறாக்கள் ஏதுமில்லை.

**மேற்படி இரு அயிட்ட தாவா சொத்துக்களின் பொறையார் கிராம புஞ்சை புதிய சர்வே எண்.78/5A1A1 ஆகும்.**

( தரங்கம்பாடி தாலுக்கா, தில்லையாடி சரக குறுவட்ட சர்வேயர் அளவீட்டிற்கு பின்னும் மேற்படி சர்வேயர் அளித்த சாட்சியத்திற்கு பின் மேற்படி தாவா சொத்தின் 1,2 அயிட்ட சொத்திற்கு சரியான சர்வே எண். 78/5A1A1 என்பதால் அதன்படி வாதிக்கு உரிய ஆவணங்களில் மாற்றம் ஏற்பட வேண்டியது அவசியமாகிறது.)

என் கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் 2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ம் நாள் இடப்பட்டது.

(ஒப்பம்) P. கனிமொழி,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

தரங்கம்பாடி